வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 21.05.2026 வியாழக்கிழமை | இதழ் : 135 | பக்கங்கள் : 08

## மீண்டும் ஒரு பொருளாதார நெருக்கடி நாட்டில் ஏற்பட இடமளிக்கமாட்டோம்!

### மட்டக்களப்பில் ஜனாதிபதி அநுர உறுதி



மட்டக்களப்பு, மே. 21

நாடு கடந்த காலத்தைப் போல மீண்டும் ஒருபோதும் ஒரு பொருளாதார நெருக்கடி நிலைக்குத் தள்ளப்படுவதற்கு இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுதியளித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற "முழு நாடும் ஒன்றாக" எனும் தேசிய வேலைத்திட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது , இலங்கை ரூபாய்க்கு நிகராக அமெரிக்க டொலரின் மதிப்பு அதிகரித்துள்ளமையினால் நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அதற்கான காரணங்களையும் விளக்கினார்.

நாட்டின் முக்கிய வருமான வழியாக விளங்கும் சுற்றுலாத்துறை, கடந்த வருட ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருட ஏப்ரலில் 29 சதவீதம் வீழ்ச்சியை எதிர்நோக்கியுள்ளது.


ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டுப் பணம் குறைவு: உலகளாவிய பிரச்சினைகள் காரணமாக நாட்டின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளதுடன், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களால் நாட்டுக்கு அனுப்பப்படும் பணத்தின் அளவும் குறைவடைந்துள்ளது.

இவை அனைத்தும் சேர்ந்து உள்நாட்டில் டொலர் பற்றாக்குறையை ஏற்படுத்துவதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

07

## மீண்டும் போர் ஏற்படக்கூடாதெனில் அதிகாரப் பகிர்வு மிகவும் அவசியம்!

### ஜனாதிபதி முன்னிலையில் சுமந்திரன்



மட்டக்களப்பு, மே. 21

"நாட்டில் இனிமேல் யுத்தம் ஏற்பட அனுமதிக்க மாட்டேன் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்றும் தெரிவித்திருக்கின்றார். நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படக்கூடாது என்றால் அதற்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு விரைந்து முன்னெடுக்கப்படவேண்டும் என்பதை நான் ஜனாதிபதிக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்."

- இவ்வாறு நேற்று முற்பகல் மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பொது நூலகக் கட்டடத்தைத் திறக்கும் நிகழ்வில் உரையாற்றிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் - எங்களுடைய தமிழரசுக் கட்சியின் ஆளுகைக்கு உட்பட்ட மட்டக்களப்பு மாநகர சபையின் பொது நூலகத்தைத் திறந்து வைப்பதற்கான அழைப்பு ஜனாதிபதி

07

## மட்டக்களப்பு நூலகத்தின் புதிய கட்டடம் ஜனாதிபதியால் மக்களிடம் கையளிப்பு

மட்டக்களப்பு, மே. 21

மட்டக்களப்பு மாநகர சபை பொது நூலகத்தின் புதிய கட்டடம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பங்கேற்புடன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனால் நேற்று முற்பகல் திறந்து வைக்கப் பட்டது.

தடைப்பட்டிருந்த இந்த நூலகத்தின் நிர்மாணப் பணிகள் வெற்றிகரமாக நிறைவடைந்ததைக் காண்பதில் மகிழ்ச்சியடைவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இங்கு குறிப்பிட்டார்.

இதற்கு இணையாக, பொது நூலகத்தின்

07



## மட்டு. சிறையில் பிள்ளையானை சந்தித்து பேசிய ராஜபக்ஷாக்கள்!

### நீதிமன்றில் வெளியான பரபரப்பு தகவல்



கொழும்பு, மே. 21

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தனை, உயிர்த்த ஞாயிறு

07

## தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு பாராளுமன்ற விசேட குழு இன்று அழைப்பு

கொழும்பு, மே. 21

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைக்க நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட குழு முன்னிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த குழு முன்னிலையில் இன்று முன்னிலையாகுமாறு தமக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு உறுதி ப்படுத்தியுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை எந்த தேர்தல் முறைமையின் கீழ் நடத்துவது என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கும்,

07

## பால்மா விலை அதிகரிப்பு!

கொழும்பு, மே. 21

இறக்குமதி செய்யப் படும் பால் மாவின் விலைகள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப் பட்டுள்ளன.

விலைத் திருத் தத்துக்கு

07

## பால் தேநீரும் விலை உயர்வு

கொழும்பு, மே. 21

இறக்குமதி செய்யப் படும் பால்மா மற்றும் சீனி ஆகியவற்றின் விலை உயர்வைத் தொடர்ந்து, நாட்டில் நேற்று நள்ளிரவு முதல் பால் தேநீர் ஒன்றின் விலை 5 ரூபாவினால்

07

## இலங்கையில் எபோலா பரவும் அபாயம் இல்லை

கொழும்பு, மே. 21

ஆபிரிக்க நாடுகளில் எபோலா வைரஸ் பாதிப்புகள் பதிவாகி வரும் போதிலும், இலங்கையில் உடனடியாக எபோலா பரவும் அபாயம் இல்லை என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர் சம்மேளனத்தின் தலைவர், விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியாக 246 சந்தேகத்திற்கிடமான

07

## ஓகஸ்ட் வரை போதுமான எரிபொருள் கையிருப்பில்!

கொழும்பு, மே. 21

நாட்டில் ஓகஸ்ட் மாதம் வரை போதுமான எரிபொருள் கையிருப்பு உள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே தெரிவிக்கையில்-

நவம்பர் மாதம் வரை தேவையான எரிபொருள் கொள்வனவுகளுக்கான முன்பதிவுகள் ஏற்கனவே

07

## மீண்டும் அராஜக நிலைக்கு நாட்டை தள்ள அரசு முயற்சி!

### பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 21

நாடு மீண்டும் ஒரு அராஜக நிலைக்குச் செல்வதைக் காண்பதற்கே தற்போதைய அரசாங்கம் முயற்சிப்பதாக பொதுஜன பெரமுன குற்றம் சாட்டியுள்ளது.

எவ்வாறாயினும், எதிர்க்கட்சிகள் மற்றும் பொதுஜன பெரமுன போன்ற குழுக்கள் நாட்டை சீர்குலைக்கும் அல்லது வன்முறையைத் தூண்டும்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடக்கு-கிழக்கு அபிவிருத்தியில் கூடுதல் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார அறிவுறுத்து

## ஆளுநரிடம் கூறிய ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள்



யாழ்ப்பாணம், மே. 21

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் கூடுதல் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தமக்கு அறிவுறுத்தியுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயர்மட்டப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முன் தினம் சந்தித்துப் பேசியபோதே இந்த தகவல் வெளியிடப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நீர் மற்றும் நகர்ப்புற அபிவிருத்திப் பணிப்பாளர் மனோஜ் சர்மா, பணிப்பாளர் சபை ஆலோசகர் மொன் வான் டெர் வ்லியட் மற்றும் இலங்கைக்கான வதிவிடப் பணிமனையின் முதன்மைச் செயற்றிட்ட அதிகாரி கமல் தஹநாயக்க உள்ளிட்டோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதன்போது, தாளையடியிலிருந்து முன்னெடுக்கப்படும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. வீடுகளுக்கான குடிதண்ணீர் இணைப்புகளை விரைவுபடுத்த வேண்டிய அவசியம் மற்றும் இணைப்புக் கட்டணங்கள் தொடர்பிலும் பிரதிநிதிகள் ஆலோசனைகளை முன்வைத்தனர்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வட மாகாண அதிகாரிகளின் தொழில்நுட்ப திறன், அர்ப்பணிப்பு மற்றும் செயற்பாட்டு திறனை ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் பாராட்டியதுடன், மக்களின் தேவைகளை உணர்ந்து செயல்படும் ஆளுநரின் தலைமைத்துவத்தையும் சிறப்பாகக் குறிப்பிட்டனர்.

நெடுந்தீவு மக்களின் குடிநீர்ப் பிரச்சினை தொடர்பாக ஆளுநர் கவனம் செலுத்தியதுடன், கடல்நீரை நன்னீராக்கும் மேலும் ஒரு எதிர்ச் சவ்வூடு பரவல் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன், யாழ்ப்பாண மாநகருக்கான கழிவுநீர் முகாமைத்துவ வலையமைப்புத் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவவுள்ளதாகவும், அதற்கான கேள்விகோரல் நடவடிக்கைகள் இந்த ஆண்டுக்குள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தும் திட்டத்தில் வடக்கு மாகாணத்தின் நலிவடைந்த உள்ளூராட்சி மன்றங்களும் இணைக்கப்பட்டு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் உறுதியளித்தனர். (அ)

# உலக சுகாதார அமைப்பினால் இலங்கைக்கு விசேட பாராட்டு!



கொழும்பு, மே. 21

பொதுச் சுகாதாரத் துறையில் இலங்கை அடைந்துள்ள வெற்றிகளைப் பாராட்டி, உலக சுகாதார அமைப்பு இலங்கைக்கு விசேட அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

குறிப்பாக, தாயிடமிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி மற்றும் சிபிலிஸ் வைரஸ்கள் பரவுவதைக் கட்டுப்படுத்தி, அது பொதுச் சுகாதாரப் பிரச்னையாகக் கருதப்படாத நிலைக்குக் குறைத்துள்ளமைக்காகவே இந்த விசேட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பினால் நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகள் மற்றும் உலகளாவிய ஆலோசனைக் குழுக்களின் பரிந்துரைகளுக்கு இணங்க, இலங்கை இந்த மைல்கல்லை எட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் தற்போது நடைபெற்று வரும் 79ஆவது உலக சுகாதாரக் கூட்டத்தொடரின்போது நேற்று முன்தினம் இந்த விசேட பாராட்டுச் சான்றிதழ் இலங்கைக்கு வழங்கப்பட்டது.

உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ரெட்ரோஸ் அதானோம் கெப்ரேயேசஸ் இந்த விசேட சான்றிதழை, இலங்கையின் சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் நேரில் கையளித்தார்.

சர்வதேச தரத்திற்கு இணங்க, பொதுச் சுகாதாரத் தரத்தைப் பேணுவதில் இலங்கையின் சுகாதாரத் துறை அடைந்துள்ள நிலையான முன்னேற்றத்தை இந்த அங்கீகாரம் பிரதிபலிக்கிறது என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# இமையாணன் அ.த.க. பாடசாலைக்கு குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம்!

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் அமைத்து வழங்கல்



யாழ்ப்பாணம், மே. 21

இமையாணன் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தின் குடிதண்ணீர் தேவைக்காக சந்நிதியான் ஆச்சிரமத்தின் 525,000 ரூபா நிதிப் பங்களிப்பில் குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதி நிறுவப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை காலை 10.30 மணியளவில் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகளால் இந்த குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதி உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

பாடசாலை முதல்வர் சிவலிங்கம் லிங்கனதாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த உதவித் திட்ட நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர் என பலர் கலந்து சிறப்பித்தனர். (அ)

# "ஒருங்கிணைந்த குடியியல் பதிவு" வேலைத்திட்டம் நாட்டில் ஆரம்பம்

கொழும்பு, மே. 21

இலங்கையின் குடியியல் பதிவு மற்றும் முக்கிய புள்ளிவிவரங்கள் கட்டமைப்பை முழுமையாக டிஜிற்றல் மயமாக்குவதற்கான "ஒருங்கிணைந்த குடியியல் பதிவு" வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே பிரெஞ்ச் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் மற்றும் உலகச் சுகாதார அமைப்பு ஆகியவற்றின் கூட்டு வழிகாட்டலில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பிராந்திய நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களை வலுப்படுத்துவதையும், தேர்தல் சீர்திருத்தச் செயல் முறைகளை விரைவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட இந்த வேலைத்திட்டத்தின் கீழ், கணினி வரைபடமாக்கல், திறன் மேம்பாடு மற்றும் அடிப்படை ஆய்வுகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், பதிவாளர் நாயகத்துக்கு ஆதரவாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தினால் நடத்தப்படும் "நடமாடும் கிளினிக்" வேலைத்திட்டம், நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் உட்பட பலரினதும் பாராட்டைப் பெற்றுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தத் திட்டத்தை 2027 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் முழுமையாக நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்த மார்க் ஆண்ட்ரே பிரெஞ்ச், கொழும்பு சுதந்திரச் சதுக்கத்தில் அமைந்துள்ள பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் வளாகத்தில், அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து இத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கான வழிகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடியுள்ளார். (அ)

# கால்நடைகள் ஏற்றிச் சென்ற லொறி மீது பொலிஸார் சூடு!

கொழும்பு, மே. 21

ஹூங்கம பகுதியில் சட்டவிரோதமாக கால்நடைகளை ஏற்றிச் சென்றதாக சந்தேகிக்கப்படும் லொறி ஒன்றின் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இதையடுத்து குறித்த லொறியில் பயணித்த நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

லொறி மூலம் சட்டவிரோதமாக கால்நடைகள் கொண்டு செல்லப்படுவது குறித்து ஹூங்கம பொலிஸ் நிலையப் பெறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கை நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து ஹூங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# அதிக கரும்புகையை வெளியிடும் வாகனங்கள் கறுப்புப் பட்டியலில்!

கொழும்பு, மே. 21

பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் டீசல் வாகனங்களில் 50 சதவீதமானவை அதிக நச்சுத் தன்மையுள்ள கரும்புகையை வெளியேற்றுவதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் புகைப் பரிசோதனைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் இதுவரை கரும்புகையை வெளியேற்றுவதாக சந்தேகிக்கப்படும் சுமார் 1,000 வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளதாக, குறித்த பிரிவின் பணிப்பாளர் தசுன் ஜானக கமகே தெரிவித்தார்.

அதிக வாகனப் பயன்பாடு கொண்ட 12 மாவட்டங்களில் இப் பரிசோதனைகள் தீவிரப்படுத்தப்பட் டுள்ளதாகவும், இதற்காக நடமாடும் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதிக கரும்புகையை வெளியேற்றும் வாகனங்களுக்கு, அந்தப் பழுதுகளைச் சரிசெய்வதற்காக 14 நாள்கள் கால அவகாசம் வழங்கப்படுகிறது.

வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் பழுதுகளைச் சரிசெய்யத் தவறும் வாகன உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அத்தகைய வாகனங்கள் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்படும் எனவும் புகைப் பரிசோதனைப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

Eelanadu

21.05.2026 வியாழக்கிழமை

பராபவ வருடம், வைகாசி 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## சீமானும் இலங்கைத் தமிழர் பிரச்சினையும்

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் குறிப்பாக, 1983 கறுப்பு ஜூலைக்கு பிறகு தமிழ்நாட்டு மக்களும் அரசியல் கட்சிகளும் இலங்கை தமிழர்களுக்கு தங்களது ஒருமைப்பாட்டை உறுதியாக வெளிக் காட்டினார்கள். மாநிலத்தின் பிரதான கட்சிகளைப் பொறுத்தவரை, தலைவர்களுக்கு இடையிலான முரண்பாடுகளும் அரசியல் நோக்கங்களும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அவற்றின் நிலைப்பாடுகளையும் அணுகுமுறைகளையும் தீர்மானித்தன என்பதும் உண்மை.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக்கு பிறகு தமிழர் பிரச்சினை தொடர்பான ஆதரவு நிலைப்பாடுகளும் ஒருமைப்பாடும் பெருமளவுக்கு இல்லாமல் போய் விட்டது. ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டு இன்றுடன் 35 வருடங்கள் நிறைவடைகிறது. தீவிர தமிழ்த் தேசியவாதப் போக்குடையவை என்று தங்களைக் காட்டிக் கொள்கின்ற சிறிய அரசியல் கட்சிகள் குழுக்கள் இலங்கை தமிழர் பிரச்சினையில் உணர்வுகளைக் கிளறும் நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தாலும், 1991 மே 21ஆம் திகதிக்கு முன்னர் இருந்த நிலைவரம் திரும்பிவரக்கூடிய சாத்தியமிலை.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தமிழ் தேசியப் பேரவை தூதுக்குழு கடந்த வருட இறுதியில் சென்னைக்குச் சென்று தற்போதைய முதலமைச்சரான தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்யைத் தவிர, ஏனைய கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து எமது பிரச்சினையை விளக்கிக் கூறினார்கள். யாழ்ப்பாணம் திரும்பிய அவர்கள் "வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் கொந்தளித்தால், தமிழ்நாடும் கொந்தளிக்கும் என்று கூறினார்கள்.

தேர்தலுக்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக ஜனவரியில் அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமஷ்டி முறையின் அடிப்படையில் தீர்வொன்றைக் காண்பதற்கு கொழும்புக்கு நெருக்குதல் கொடுக்குமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு ஒரு கடிதத்தை எழுதினார். அதற்கு பிறகு அவர் அந்த பிரச்சினையைப் பற்றி பேசவேயில்லை.

அண்மையில் நடைபெற்று முடிந்த சட்டசபை தேர்தல் பிரசாரங்களில் இலங்கைத் தமிழர் பிரச்சினை உண்மையில் காணாமலே போய் விட்டது. ஆனால், விஜய் தேர்தலில் வெற்றி பெற்ற நாள் தொடக்கம் எமது தமிழ் அரசியல்வாதிகள் அவர் ஏதோ இந்தியாவின் பிரதமராகவிட்டதை போன்று இனவழிப்புக்கு சர்வதேச நீதியையும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வையும் பெற்றுத்தருமாறு வேண்டுகோள் விடுத்த வண்ணமிருக்கிறார்கள்.

விஜய்யும் கூட முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு தனது ஒருமைப்பாட்டை வெளிக்காட்டினார். இனிமேல் இன்னொரு நினைவேந்தல் நிகழ்வு வரும்போதுதான் அவரின் ஒருமைப்பாட்டு உணர்வு வெளிப்படும்.

இதனிடையே, நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் "மே 18 இனவழிப்பு நாளை " அனுஷ்டித்து நடத்திய நிகழ்வில் " 13 வது திருத்தத்தைப் பற்றி ஆட்கள் பேசிக் கொண்டேயிருப்பார்கள். ஆனால், தனித்தமிழ் ஈழம் ஒன்று மாத்திரமே தீர்வாக இருக்க முடியும்" என்று கூறினார்.

தமிழ்நாட்டில் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் இலங்கையில் தமிழர்களுக்கு தனியான அரசை அமைப்பதற்காக சர்வஜனவாக்கெடுப்பு ஒன்றை நடத்துமாறு கோரப்போவதாகவும் அவர் அறிவித்தார். சட்டசபை தேர்தலில் போட்டியிட்ட சகல 234 தொகுதிகளிலும் சீமான் உட்பட நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்கள் சகலரும் கட்டுப் பணத்தை இழந்ததுடன் அந்த கட்சி மாநிலக் கட்சி என்ற தேர்தல் ஆணையகத்தின் அங்கீகாரத்தையும் இழந்து நிற்பதைப் பார்க்கும்போது அவர் மிக நீண்டகாலத்துக்கு சர்வஜன வாக்கொடுப்பு கோரிக்கையை முன்வைக்கக்கூடிய வாய்ப்பு இல்லை எனறே தெரிகிறது.

எல்லாவற்றுக்கும் முன்னதாக, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தமிழ்நாட்டு வாக்காளர்கள் மத்தியில் முன்னுரிமை கொடுக்கும் அரசியல்வாதிகளின் கட்சிகளை மாநில மக்கள் ஏன் ஓரங்கட்டுகிறார்கள் என்பதை சீமான் ஆராயந்து பார்ப்பது நல்லது.

# முதல்வர் விஜய்யின் கச்சதீவு கருத்து நாட்டின் இறையாண்மைக்கு சவால்!

## இந்துராகாரே தேரர் எச்சரிக்கை



கொழும்பு, மே. 21

தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் கச்சதீவு குறித்து வெளியிட்ட கருத்து, இலங்கையின் இராணுவத்தினர் தமது உயிரைத் தியாகம் செய்து பாதுகாத்த நாட்டின் இறையாண்மைக்கும் நோக்கங்களுக்கும் பாரிய சவாலாக அமைந்துள்ளதாக பேராசிரியர் இந்துராகாரே தேரர் தெரிவித்துள்ளார்.

மகாபிரிவெனாவில் நடைபெற்ற போர் வீரர்களை நினைவுகூரும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்-

தமிழக முதலமைச்சர் கச்சதீவை மீட்பேன் என்று கூறியபோது, யாழ்ப்பாணத்தில் உள்ள சில குழுக்கள் அதற்கு ஆதரவாகக் கோஷமிட்டுக் கொண்டாடினர். பாராளுமன்றத்தில் உள்ள அவரது ஆதரவாளர்களும் இதற்கு வாழ்த்துத் தெரிவித்தனர். ஆனால், எமது தலைவர்கள் கச்சத்தீவுக்குச் சென்று பார்வையிட்டு விட்டு, "அங்கு பெற்றுக் கொள்வதற்கு எதுவும் இல்லை" எனக் கூறியிருந்தனர்.

அதனைக் கொடுத்தாலும் பரவாயில்லை" என்ற ரீதியிலேயே அடுத்தகட்ட நகர்வுகள் அமையப் போவது போல் தோன்றுகிறது. இன்று பாராளுமன்றத்தில் இருந்து கொண்டு விஜய்யின் ஆதரவாளர்கள் யாழ்ப்பாணத்தை மட்டுமல்ல, ஒட்டுமொத்த வட மாகாணத்தையுமே பெற்றுக் கொள்ளுமாறு கோரி வருகின்றனர்.

இந்த அரசியல் கொள்கை மற்றும் நகர்வானது, எதிர்காலத்தில் எமது நாட்டின் இராணுவத்தினர் தமது உயிரைத் தியாகம் செய்து பாதுகாத்த நாட்டின் இறையாண்மைக்கு பாரிய சவாலாகவும், ஒரு உணர்வுப்பூர்வமான பிரச்னையாகவும் மாறப்போவது உறுதி - என்றார். (அ)

# யாழ்ப்பாணத்தில் 5 மாதங்களில் 497 பேர் டெங்குவினால் பாதிப்பு!

## மாவட்ட செயலர் தகவல்



யாழ்ப்பாணம், மே. 21

யாழ்ப்பாணத்தில் கடந்த 5 மாதங்களில் டெங்கு நோயால் 497 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் தலைமையுரை ஆற்றிய மாவட்ட செயலர்,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2026ஆம் ஆண்டு மே மாதம் வரை டெங்கு நோயால் 497 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரு வருடங்களிலும் யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் உயிரிழப்புகள் பதிவாகவில்லை. அதற்கு முந்திய வருடங்களிலும் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை குறைவாகவே காணப்பட்டது.

இனிவரும் காலங்களில் நோய்த் தாக்கம் அதிகரிக்காத வகையில் அதனை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

தற்போது நாட்டில் பல பகுதிகளில் மழை பெய்து வருவதால் ஏற்படக்கூடிய டெங்கு நோய் பரவல் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும் - என்றார்.

அதனை தொடர்ந்து டெங்கு விழிப்புணர்வு வாரத்தை எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை கடைபிடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 25ஆம் திகதி பொதுமக்கள் சிரமதானத்தில் ஈடுபடுவது, 26ஆம் திகதி அரசாங்க அலுவலகங்கள், பாடசாலைகளிலும் 27ஆம் திகதி தனியார் வர்த்தக நிலையங்களிலும் கள ஆய்வுகள் மற்றும் சிரமதானம் மேற்கொள்வது என இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

டெங்கு தாக்கம் அதிகமாக காணப்படும் கரவெட்டி, யாழ்ப்பாணம், பருத்துத்துறை, கோப்பாய், சங்கானை, சாவகச்சேரி, நல்லூர், சண்டிலிப்பாய் மற்றும் உடுவில் ஆகிய பிரதேச செயலகங்களில் டெங்கு வாரத்துக்குப் பின்னர் ஜூன் மாதம் 8ஆம் திகதியும் இதே செயற்பாட்டை மீண்டும் பின்பற்றுமாறு மாவட்ட செயலரால் தெரிவிக்கப்பட்டது. (அ)

# குறைந்த பட்ச பஸ் கட்டணம் 40 ரூபாவாக அதிகரிக்கலாம்!

கொழும்பு, மே. 21

எதிர்வரும் ஜூலை மாதம் இடம்பெறவுள்ள வருடாந்த பஸ் கட்டண திருத்தத்தின் போது, குறைந்தபட்ச பஸ் கட்டணம் 40 ரூபாவாக அதிகரிக்கக்கூடும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன எச்சரித்துள்ளார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருவதால், அது போக்குவரத்து செலவுகளை மேலும் அதிகரிக்கக்கூடும் என அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், அமெரிக்க டொலர் பரிமாற்ற வீதம், வட்டி வீதங்கள் மற்றும் பேருந்துகளின் விலை உள்ளிட்ட 12 முக்கிய அளவுகோல்களின் அடிப்படையிலேயே வருடாந்த பஸ் கட்டண திருத்தம் தீர்மானிக்கப்படுகிறது.

நாணய மதிப்பின் தொடர்ச்சியான வீழ்ச்சியானது கட்டண மாற்றங்களில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும். தற்போதைய நிலைமை பஸ் உரிமையாளர்கள் மற்றும் பயணிகள் ஆகிய இரு தரப்பினருக்கும் சவாலாக மாறியுள்ளது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**இடபம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் வாய்ப்புகள் வரும். உற்சாகமான நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். சில வேலைகளை உடனே முடிக்க வேண்டுமென்று நினைப்பீர்கள்.

**கடகம்**
எதையும் திட்டமிட்டு செய்ய பாருங்கள். பிள்ளைகளைப் பற்றிய கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் பொறுப்புகள் கூடும். நிதானம் தேவைப்படும்.

**சிம்மம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவீர்கள். நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். வேற்று மதத்தவர் உதவுவார். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கன்னி**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். உங்களை தவறாக நினைத்துக் கொண்டிருந்தவர்கள் மனசு இப்பொழுது மாறும். திறன் பெருகும்.

**துலாம்**
உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெறுவீர்கள். சாதிக்கும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்கு சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப் படாமல் இருங்கள் இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறையும். கடினமாக உழைக்க வேண்டும்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதம் வந்துபோகும். தாயாரின் உடல் நிலைசீராகும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் ஆதரிப்பார்கள்.

**மகரம்**
எதிர்பாராத தனவரவு உண்டு. பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**கும்பம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றி நல்லவர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் வரும். அதிகாரிகளுடன் சில முக்கிய ஆலோசனைகள் தருவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மீனம்**
பால்ய நண்பர்கள் தேடிவருவார்கள். பழைய கடனைத்தீர்க்க முயற்சி செய்வீர்கள். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். கவனமாகப் பழகுங்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

# யாழ்ப்பாணம்-கதிர்காமம் பாத யாத்திரை ஆரம்பம்!

## சனிக்கிழமை சந்நிதியிலிருந்து சம்பிரதாயபூர்வமாக புறப்படும்

யாழ்ப்பாணம், மே. 21


யாழ்ப்பாணத்தில் இருந்து கதிர்காமம் நோக்கிய இலங்கையின் மிக நீண்ட பாதயாத்திரை நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை பண்டத்தரிப்பிலிருந்து முன்னோடி பயணமாக ஆரம்பமானது.

ஜெயாவேல்சாமி தலைமையிலான இப் பாதயாத்திரை, மூத்த முருக பக்தர் துரைச்சாமி அடியார் வேண்டுகோளுக்கிணங்க, பண்டத்தரிப்பு பிரான் பற்று பெரியவளவு முருகன் ஆலயத்திலிருந்து 45 அடியார்களுடன் ஆரம்பமானது.

அன்றிரவு கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் தங்கி இருந்தனர்.

நேற்று புதன்கிழமை மாவிட்டபுரம் ஊடாக மயிலிட்டி பேச்சியம்மன் ஆலயத்தை வந்தடைந்தனர்.

இன்று தொண்டமானாறு அக்கரை நாகபூசணி அம்மன் ஆலயத்தை அடைந்து நாளை வெள்ளிக்கிழமை காலை செல்வச் சந்நிதி ஆலயத்தை ஆலயத்தைச் சென்றடைவர்.



யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து 23 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை கதிர்காம பாதயாத்திரை முறைப்படி விசேட பூசைகள் சகிதம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பமாகவுள்ளது.

அதன்போது, மேலும் நூறு அடியார்கள் இப் பாரிய பாத யாத்திரையில் இணைந்து கொள்வர்.

இலங்கையின் மிக நீண்ட பாதயாத்திரையாகக் கருதப்படும் இப்புனிதப் பயணம், வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களை இணைத்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய ஏழு மாவட்டங்கள் வழியாக இடம்பெறுகிறது.

55 நாள்கள் கால்நடைப் பயணமாக, 108 ஆலயங்களைத் தரிசித்து, சுமார் 815 கிலோமீற்றர் தூரம் நடந்து கதிர்காம முருகனை தரிசிக்கும் இப்புனித யாத்திரை, இலங்கையின் மிக நீண்ட தூர பாதயாத்திரைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. (அ)

## யாழ். மாநகர சபைக்கு புதிய ஆணையாளர்



யாழ்ப்பாணம், மே. 21

யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய ஆணையாளராக டி.சி.அரவிந்தராஜ் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், மாநகர ஆணையாளரான கடமையாற்றிய எஸ். கிருஸ்ணேந்திரன் வடக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட இந்த இரு அதிகாரிகளுக்கான உத்தியோகபூர்வ நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு, ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆளுநர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலனும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## நவக்கிரியில் சித்த மருத்துவ கண்காட்சி

யாழ்ப்பாணம், மே. 21

இளவேனில் கால பூக்களின் பயன்பாடு என்னும் தொனிப் பொருளிலான சித்த மருத்துவ கண்காட்சி நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நவக்கிரி மத்திய மருந்தகத்தில் இடம்பெற்றது.

வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் யாழ் சித்த மருத்துவ பீட துறையும் இணைந்து குறித்த கண்காட்சியை ஏற்பாடு செய்தன.

இளவேனில் காலத்தில் காணப்படும் 50 வகையான பூக்களின் மூலம் கிடைக்கின்ற மருத்துவ குணங்களும் அதன் மூலம் பெறப்படுகின்ற பயன்களும் தொடர்பாக இந்த கண்காட்சியில் விளக்கப்பட்டது.

இதன்போது யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையினர், வடமாகாண சுதேச சித்த மருத்துவப் பணிப்பாளர், சித்த வைத்தியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ)

## பாலமோட்டையில் கைவிடப்பட்ட கிணற்றுக்குள் விழுந்த யானை!

முல்லைத்தீவு, மே. 21

பாலமோட்டை கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம், மடத்துவிளாங்குளம் பகுதியில், கைவிடப்பட்ட கிணறு ஒன்றுக்குள் யானை ஒன்று விழுந்துள்ளதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் மாலை வேளையில் கிராம மக்கள் அப் பகுதிக்குச் சென்றபோதே, கிணற்றுக்குள் யானை விழுந்து உயிருக்கு [illegible]



பதை அவதானித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, கிராம மக்களால் உடனடியாக இது குறித்து பொலிஸாருக்கும் வனஜீவ ராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் தகவல் வழங்கப்பட்டது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்துள்ள வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார், கிராம மக்களின் உதவியுடன் கிணற்றுக்குள் சிக்கியுள்ள யானையை பாதுகாப்பாக மீட்பதற்கான தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### ஒன்லைன் நிதி மோசடி குறித்து

# இரண்டு வாரங்களில் மட்டும் 311 வெளிநாட்டவர்கள் கைது!

கொழும்பு, மே. 21

மே மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் மாத்திரம் கணினி மற்றும் மடி கணினியைப் பயன் படுத்தி பாரியளவான நிதி மோசடியை முன்னெடுத்தனர் எனக் கூறப்படும் 311 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் வெளிநாட்டுப் பெண்கள் பலர் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர்களிடமிருந்து சைபர் குற்றங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் நூற்றுக்கணக்கான மடி கணினி மற்றும் கணினிகளும் 600 வரையிலான கைபேசிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனா, மலேசியா, இந்தியா, நேபாளம், வியட்நாம், தாய்லாந்து மற்றும் பெரு ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு சந்தேகத்தின் அடிப்படை யில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் மத்தியில் பெண்கள் ஐவர் உள்ளடங்கலான சீனப் பிரஜைகள் 171 பேர் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் சுற்றுலா விசாவில் வருகை தந்து ஹோட்டல் அறைகள் மற்றும் வீடுகளை வாடகை அடிப்படையில் பெற்று இணையத்தினூடாக பெருந்தொகை நிதி மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை கணினி கட்டமைப்புகளினூடாக உறுதிப்படுத்தப்பட் டுள்ளதாகப் பொலிஸ் தலைமையக உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கொம்பனி வீதி பகுதியில் ஹோட்டலொன்றை சுற்றிவளைத்து 18 சீனப் பிரஜைகள் மற்றும் பெரு நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவரும் பொலிஸாரால் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 14 கணினிகள் மற்றும் 399 கைபேசிகளும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

கொள்ளுபிட்டி பிரதேசத்தில் ஹோட்ட லொன்று சுற்றிவளைக்கப்பட்டபோது, 74 வியட்நாம் பிரஜைகள் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் மாத்தறை வலய குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினால் தாய்வானைச் சேர்ந்த நால்வரும், தாய்லாந்து பெண்ணொருவர் மற்றும் சீனப் பிரஜையொருவரும் அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தலங்கம பொலிஸாரால் ஹோட்டலொன்று சுற்றிவளைக்கப்பட்டபோது 39 சீனப் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெலிக்கடை பொலிஸாரால் சீனப் பிரஜைகள் 100 பேரும் களுத்தறை வடக்கு பொலிஸாரால் ஹோட்டலொன்று சுற்றிவளைக்கப்பட்டபோது 12 பேரும் மலேசிய நாட்டவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, காலி பொலிஸாரால் இரு ஹோட்டல்கள் சுற்றிவளைக்கப்பட்டபோது 100 இந்தியர்கள் கைதாகியுள்ளதுடன், அவர்களிடமிருந்து 25 மடிகணினிகளும் 119 கைபேசிகளும் கைபற்றப்பட்டுள்ளன.

மிதிகம பிரதேசத்தில விடுதியொன்று சுற்றவளைக்கப்பட்டதில் 28 இந்தியர்களும் நேபாள நாட்டவர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக அக்மீமன பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளால் தொடந்துவ பிரதேசத்தில் ஹோட்டலொன்று அண்மையில் சுற்றிவளைக்கப்பட்டபோது 35 இந்தியர்களும் 20 நேபாள பிரஜைகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மடிகணினிகள் கைபேசிகள் தொகைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

(அ)

# வருமானவரி திருத்த சட்டமூலம் திருத்தங்களுடன் நிறைவேறியது

கொழும்பு, மே. 21

உள்நாட்டு வருமானவரித் திருத்தச் சட்டமூலம், திருத்தங்களுடன் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் விவாதத்தின் பின்னர் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாராளுமன்றக் குழு நிலை விவாதத்தின்போது, முன்னதாக நீதிமன்றத்தில் உடன்பாடு எட்டப்பட்ட பல திருத்தங்களை அரசாங்கம் இந்தச் சட்டமூலத்தில் உள்ளடக்கியிருந்தது.

நாட்டின் வரி வருவாயை அதிகரிப்பதுடன், தற்போதைய வரி விதிப்பு முறையில் காணப்படும் சிக்கல்களைக் குறைத்து, மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட வரி முறையொன்றை அறிமுகப்படுத்துவதே இந்தச் சட்டமூலத்தின் பிரதான நோக்கமாகும்.

அத்துடன், உள்நாட்டு வருமானவரித் திணைக்களத்துடன் உடன்பாடுகளுக்கு வராமல், திட்டமிட்ட முறையில் வரி செலுத்துவதைத் தவிர்க்கும் நபர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான சட்ட விதிகளும் இந்த புதிய சட்ட மூலத்தின் மூலம் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த விவாதத்தின்போது, வரி அபராதங்களைச் செலுத்துவதற்கான கால அவகாசத்தை 30 நாள்களிலிருந்து 90 நாள்கள் வரை நீடிக்குமாறு எதிர்க்கட்சியினர் பல திருத்தங்களை முன்மொழிந்தபோதிலும், அதற்கு பாராளுமன்றத்தில் அமுல்படுத்தக்கூடிய அங்கீகாரம் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# டெங்கினால் இதுவரை 15 மரணங்கள் பதிவு!

கொழும்பு, மே. 21

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 29,589 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, 2026 மே 18ஆம் திகதி வரை 15 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் மருத்துவ நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, மாத்தறை, காலி, களுத்துறை, கண்டி ஆகிய மாவட்டங்களி லேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

பாடசாலைகள், அரச நிறுவனங்கள், பணிபுரியும் இடங்கள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களில் டெங்கு நோய் பரவும் வேகம் அதிகரித்துள்ளமை பூச்சியியல் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாக மருத்துவ நிபுணர் பிரஷீலா சமரவீர மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

# 87 கைபேசிகளுடன் மூன்று சீனர்கள் கைது

கொழும்பு, மே. 21

கைபேசிகள் மற்றும் மின்கலங்களை நாட்டுக்குள் கொண்டு வந்ததன் காரணத்தினால் மூன்று சீன நாட்டுப் பிரஜைகள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை வருகை முனையத்தில் வைத்து அவர்கள் இடைமறிக்கப்பட்டுள்ளனர்.

மூவரும் சீனாவின் ஷாங்காயிலிருந்து சைனா ஈஸ்டர்ன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் இலங்கைக்கு வந்துள்ளனர். மூவரில் ஒரு பெண்ணும் அடங்குவார்.

சொக்கலேட்டுகள், இனிப்புப் பொருள்களுக்கு மத்தியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைபேசிகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

மொத்தமாக ரூ. 514 மில்லியன் மதிப்புள்ள 87 கைபேசிகள் மற்றும் 140 மின்கலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவை இணைய வழி குற்றச் செயல்களில் பயன்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்டிருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

(அ)

# மழையால் சேதமடைந்த பயிர்களுக்கு இழப்பீடு!

கொழும்பு, மே. 21

அண்மைய நாள்களில் பெய்த பலத்த மழை காரணமாக, இம்முறை யால பருவத்தில் ஏற்பட்ட பயிர்ச் சேதங்களுக்கு ஹெக்ரேயர் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை இழப்பீடு வழங்கப்படும் என விவசாய மற்றும் விவசாய காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

இந்த இழப்பீட்டுத் திட்டம் நெல், சோளம், உருளைக்கிழங்கு, சோயா, மிளகாய் மற்றும் வெங்காயம் ஆகிய பயிர்களுக்குப் பொருந்தும்.

மழையினால் பயிர்ச் சேதங்களுக்கு உள்ளான விவசாயிகள், அதுகுறித்த விபரங்களை அடுத்த 14 நாள்களுக்குள் தத்தமது பிரதேச விவசாய சேவை நிலையங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அம்பாறை களஞ்சியசாலைகளில் 50,000 மெற்றிக் தொன் நெல் தேக்கம்

## உடன் அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் சபையில் உதுமாலெப்பை எம்.பி. வலியுறுத்தல்

கொழும்பு, மே. 21

அம்பாறை மாவட்டத்தின் நெல் களஞ்சியசாலைகளில் நீண்டகாலமாக குவிந்து கிடக்கும் சுமார் 50,000 மெற்றிக் தொன் நெல்லை உடனடியாக அகற்ற அல்லது மாற்றுவதற்கான அவசர நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், தேசிய அளவில் 22 வீதத்திற்கும் அதிகமான நெல் உற்பத்தியை வழங்கும் முக்கிய மாவட்டமாக அம்பாறை விளங்குவதாக குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஏற்பட்ட தொடர் வெள்ளப் பாதிப்புகளால் அம்பாறை மாவட்ட விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், கடந்த வருடம் விவசாயிகளிடமிருந்து நெல் சந்தைப்படுத்தும் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட சுமார் 50,000 மெற்றிக் தொன் நெல் தற்போது மாவட்டத்தின் பல்வேறு களஞ்சியசாலைகளில் தேக்கமடைந்து கிடப்பதாக சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் ஜூலை மாதத்தில் இப்போக நெல் அறுவடை ஆரம்பமாகவுள்ள நிலையில், தற்போது களஞ்சியசாலைகளில் சேமிக்கப்பட்டுள்ள நெல்லை அகற்றாதிருப்பது பாரிய சிக்கலை உருவாக்கும் என அவர் எச்சரித்தார்.

எனவே, களஞ்சியங்களில் உள்ள நெல்லை உடனடியாக வேறு இடங்களுக்கு மாற்றுதல், அரிசியாக மாற்றும் உற்பத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் மற்றும் களஞ்சிய இட வசதிகளை விரிவுபடுத்துதல் போன்ற அவசர நடவடிக்கைகளை விவசாய அமைச்சும் நிதி அமைச்சும் இணைந்து முன்னெடுக்கவேண்டும் என எம்.எஸ். உதுமாலெப்பை கோரிக்கை விடுத்தார். (அ)

# கிழக்கில் இனவாத அடிப்படையிலே அரசு செயற்படுவது கவலைக்குரியது

## இம்ரான் மகரூப் எம்.பி. சுட்டிக்காட்டு

திருமலை, மே. 21

இந்த அரசாங்கம் இனவாதத்தை ஒழித்து சகல சமூகங்களுக்கும் நியாயமான அடிப்படையில் செயற்படுவதாகக் கூறிக் கொண்டாலும் அது கிழக்கு மாகாணத்தில் இனவாதத்தின் அடிப்படையிலேயே செயற்பட்டு வருவது கவலையைத் தருகின்றது என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.


இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்-

கிழக்கு மாகாணம் தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணமாகும். இந்த மாகாணத்தில் தமிழ் பேசும் அதிகாரி ஒருவரை பிரதம செயலாளராக நியமிக்கும் மன நிலை இந்த அரசாங்கத்துக்கு இல்லை. கடந்த அரசாங்கங்கள் கடைப்பிடித்த கொள்கையையே இந்த அரசாங்கமும் இந்த விடயத்தில் கைக்கொண்டு வருகின்றது.

இதிலும் கவைலைக்குரிய விடயம் என்னவென்றால் பிரதம செயலாளராக இருக்கின்றவர் தற்போது விடுமுறையில் இருக்கின்றார். இதற்கான பதில் கடமையும் தமிழில் கடமையாற்ற முடியாத ஒருவருக்கே கிழக்கு மாகாண ஆளுநரால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் இனவாதமில்லாத நியாயமான ஆட்சியை முன்னெடுப்பதாக ஊடகங்களில் கூறிக் கொண்டாலும் இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதை உறுதிப்பத்த கிழக்கு மாகாணத்தில் வழங்கப்படும் இந்த நியமனங்கள் நல்ல உதாரணமாகும்-என்றார். (அ)

# நான்கு கிராமிய வீதிகளுக்கான அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்



அம்பாறை, மே. 21

கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அட்டாளைச் சேனை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட கிராமிய வீதிகளுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வு அட்டாளைச் சேனை பிரதேச செயலாளர் ஏ. சீ.அப்கர் தலைமையில், அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவரும் இலங்கை அரசியலமைப்புப் பேரவை உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவாவின் பங்கேற்புடனும் நடைபெற்றது.

இதன்போது ரூபா 4 மில்லியன் செலவில் அட்டாளைச் சேனை வட்டானை வீதி, ரூபா 3 மில்லியன் செலவில் பாலமுனை வம்மியடி வீதி, 3 மில்லியன் செலவில் ஒலுவில் மஹாபொல வீதி, ரூபா 2 மில்லியன் செலவில் தீகவாபி ஜெயலத்த வீதி ஆகிய நான்கு வீதிகளுக்கான அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன

இந்நிகழ்வில் அட்டாளைச் சேனை பிரதேச செயலகத்தின் உதவி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர், பிரஜா சக்தி தவிசாளர்கள், உறுப்பினர்கள், தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். (அ)

# நாவிதன்வெளியில் நலிவுற்ற மக்களுக்கு ரூ.18 இலட்சம் செலவில் வாழ்வாதார உதவி

அம்பாறை, மே. 21

நாவிதன்வெளி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் நலிவுற்ற குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன், குடிதண்ணீர் மற்றும் மின் இணைப்புக்கான நிதியுதவிகள் வழங்கும் விசேட நிகழ்வு நேற்று புதன்கிழமை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் இந்திரன் ரூபசாந்தன் தலைமையில் நடைபெற்றது.

பிரதேச சபை பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டு திட்டத்தின்கீழ், 2026ஆம் ஆண்டிற்கான நலன்புரி வேலைத்திட்டமாக இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கருத்து தெரி வித்த தவிசாளர் இந்திரன் ரூப சாந்தன்,

வறுமையில் வாழும் தேவையுடைய மக்களின் கோரிக்கைகளுக்கு இணங்க, அவர்களின் நலன் கருதி இவ்வருடம் 18 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியின் மூலம் மக்களின் வாழ்வாதார உதவிகள், குடிநீர் மற்றும் மின்சார இணைப்புகள் வறுமைக்கோட்டின்கீழ்



வாழும் மக்களின் கோரிக்கைகளுக்கு அமைய பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ளன" எனக் குறிப்பிட்டார்.

இதற்கமைய, பொருளாதார ரீதியாக நலிவுற்ற குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மின்சார இணைப்புக்கான கட்டணம் (இலங்கை மின்சார சபை), குடிதண்ணீர் இணைப்புக்கான கட்டணம் (தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை)

ஆகியவற்றுக்காகச் செலுத்தப்பட்ட உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டுகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் இதன்போது உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதேச சபையின் உப தவிசாளர் கே. புவனரூபன், உறுப்பினர்களான கே. உதயகுமார், த. சித்திரகுமார், எம்.பி. நிவாஸ், கு. நிரோஜன், ஏ.எல்.சௌதியா ஆகியோருடன் பிரதேச சபைச் செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# காரைதீவு கண்ணகை அம்பாளின் வைகாசி திருக்குளிர்த்திச் சடங்கு

காரைதீவு, மே. 21

வரலாற்றுப்பிரசித்திபெற்ற காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசி திருக்குளிர்ச்சி சடங்கு எதிர்வரும் 25ஆம் திகதி திங்கள்கிழமை மாலை கடல்தீர்த்தம் எடுத்து வந்து திருக் கல்யாணக்கால் நடலுடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆலயத்திலிருந்து தர்மகர்த்தாக்கள் கப்புகனார் சகிதம் பக்தர்கள் கடலுக்குச்சென்று தீர்த்தம் எடுத்து வரும்வழியில் கல்யாணக்கால் முறித்து அதனைக் கொணர்ந்து கிரியைகள் செய்து ஆலயத்தில் நடுவார்கள்.

தொடர்ந்து ஏழு நாள்கள் பயபக்தியுடன் சடங்குகள் நடைபெற்று ஜூன் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு திருக்குளிர்த்தி பாடலுடன் சடங்கு நிறைவடையும்.

ஜூன் 01ஆம் திகதி திங்கள் கிழமை காலையில் மடிப்பிச்சை எடுக்கும் நிகழ்வும் பி.ப.3 மணிக்கு பொங்கலுக்கு நெற்குத்தும் வைபவமும் நடைபெறும். (அ)

# சம்மாந்துறையில் 33 லீற்றர் கசிப்புடன் கைதாகிய பெண்ணிடம் விசாரணை!

அம்பாறை, மே. 21

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை புறநகர் பகுதியான வீரமுனை 03 பகுதியில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது தன்வசம் வைத்திருந்த 33 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் 40 வயதுடைய பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி என். ரிபாய் [illegible] வீட்டில் 22 போத்தல்களில் சூட்சுமமாக அடைத்து வைக்கப்பட்ட நிலையில் விற்பனைக்காக வைக்கப்பட்ட கசிப்பை மீட்டுள்ளனர்.

அத்துடன் 25 வயது மதிக்கத்தக்க மலையடி கிராமம் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் 10 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த நிலையில் கைதானார். குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட இச் சந்தேக நபர் தொடர்பிலும் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# மட்டக்களப்பு வாவியில் ஆணின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு, மே. 21

மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு அருகிலுள்ள வாவியில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கிய நிலையில், நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில் மீட்கப்பட்டுள்ளதாக மட்டு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வாவியில் சடலம் ஒன்று மிதப்பதைப் பார்த்த பொதுமக்கள் இது குறித்துப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், அது ஓர் ஆணின் சடலம் எனக் கூறினர். எனினும், அவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. சடலத்தை மீட்டுப் பிரேத பரிசோதனைக்காக மட்டு போதனா வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மீண்டும் போர்...

அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பப்பட்டபோதே அவர் இந்த நிகழ்வில் பங்குபற்ற வருவார் என்று நான் உறுதியாக நம்பினேன். அதற்குக் காரணம் உண்டு. அவர் அடிக்கடி யாழ்ப்பாணம் பொது நூலகம் பற்றிப் பேசுபவர். யாழ்ப்பாணம் மக்கள் அந்த நூலகத்துக்குள் நுழையும் போது செருப்புகளைக் கழற்றி வைத்துவிட்டு உள்ளே நுழைவார்கள், நூலகத்தைக் கோயில்போல் பயன்படுத்துவார்கள் என்று அவர் அடிக்கடி கூறியிருக் கின்றார்.

அண்மையில் கூட கம்பன் விழாவில் தாம் ஆற்றிய உரையிலும் நூலகத்தையும் அதன் பெறுமதியையும் சிலாகித்து அவர் பேசியிருந்தார். ஆகையினால் நூலகத் திறப்பு விழாவுக்கு எங்கள் அழைப்பை ஏற்று அவர் கட்டாயம் வருவார் என்று நாங்கள் நம்பினோம். அந்த அழைப்பை ஏற்றமைக்காக அவருக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

இங்கு நாடாவை வெட்டி பொது நூலகத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, அது தொடர்பான நினைவுக்கல்லின் திரை நீக்கத்தை என்னைச் செய்யும்படி கேட்டுக்கொண்டார். ஒருவகையில் இது எங்கள் பணிகளை நாங்கள் எங்களுக்குள் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு முன்மாதிரி. நாட்டின் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு முன்னுதாரணம் - அடையாளம் என்று நான் நினைக்கிறேன்.

நேற்றுக் கூட ஜனாதிபதி உரையாற்றிய சமயம் இந்த நாட்டில் இனியொரு யுத்தம் நடைபெற அனுமதிக்க மாட்டேன் என்று உறுதி கூறியிருந்தார்.

அவர் ஆயுதம் ஏந்திப் போராடிய ஒரு குழுவில் இருந்து வந்தவர். நாங்கள் ஆயுதமேந்திப் போராடிய ஒரு மக்கள் கூட்டம். இரு தரப்பினருமே இனி யுத்தம் புரிவதில்லை, அதை வரவேற்பதில்லை என்ற தீர்மானத் துக்கு வந்திருக்கின்றோம்.

ஆனால், நாட்டில் இனி யுத்தம் ஏற்படக் கூடாது என்றால், அதற்கு அர்த்தமுள்ள அதிகாரப் பயிர்வு செய்யப்பட வேண்டும். அதற்கான அடையாளமாகவே இன்று பொது நூலகத்தை நாடா வெட்டி திறந்து வைப்பதையும் அதை ஒட்டிய நினைவுக்கல்லை திரை நீக்கம் செய்து வைக்கின்ற விடயத்தையும் நாங்கள் பகிர்ந்து கொண்டோம் என்று நான் நினைக்கின்றேன்.

அந்த அடிப்படையில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு செய்யப்பட வேண்டிய அவசியத்தை நான் ஜனாதிபதி க்கு ஞாபகமூட்ட விரும்புகின்றேன்." - என்றார். (அ)

## மீண்டும் ஒரு...

ரூபாவின் வீழ்ச்சி காரணமாக எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான செலவினம் பாரியளவில் அதிகரித்துள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதன்படி, மாதம் ஒன்றுக்கான எரிபொருள் இறக்குமதி செலவினம் 500 மில்லியன் அமெரிக்க டொலருக் கும் அதிகமாக அதிகரித்துள்ளது.

இது ரூபாவின் வீழ்ச்சியையும் டொலருக்கான தேவையையும் மேலும் தீவிரப்படுத்தியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை குறித்தும் ஜனாதிபதி கருத்து தெரிவித்தார்.

தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் நீடிக்கப்பட்ட கடன் வசதி திட்டத்தின் மீளாய்வை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாகவும், இதன்போது அரசாங்கத்தின் புதிய யோசனைகள் சில நாணய நிதியத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையைச் சமாளிக்க ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாட்டு மக்களி டம் சில கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளார்:

“தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்திற் கொண்டு, குறுகிய காலத்திற்கு எரிபொருள் பயன்பாட்டை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதேபோல், இறக்குமதி செலவினங்களைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நாட்டில் டொலர் பற்றாக்குறை ஏற்படாமல் தடுப்பதற்குச் சகல பிரஜைகளும் அரசாங்கத்திற்குத் தங்களது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்." என கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அரசாங்கம் என்ற ரீதியில் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பிரதான சவால்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் குறித்து ஜனாதிபதி விரிவாக விளக்கமளித்துள்ளார்.

பலமிக்க பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்ப வேண்டியதே தமது அரசாங்கத்தின் முதலாவது சவால் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மைய காலமாக நாட்டின் பொருளாதாரத்திற்கு கடும் அழுத்தத்தை ஏற்படுத்திய முக்கிய காரணிகளாக ஜனாதிபதி பட்டியலிட்டார்:

பல்வேறு நாடுகளின் அரசாங்கங்களினால் விதிக்கப்பட்ட வரிக்கொள்கை காரணமாக எமது பொருளாதாரத்திற்கு அழுத்தம் ஏற்பட்டது.

அண்மைய வரலாற்றில் உள்நாட்டில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்திய ‘டித்வா’ சூறாவளி அனர்த்தத்தில் இருந்து மீண்டெழுவதே பெரும் சவாலாக அமைந்தது.

மத்திய கிழக்கினை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள போர் சூழல் காரணமாக, உலகிலுள்ள ஏனைய வளரும் நாடுகளைப் போலவே இலங்கையும் கடுமையான பொருளாதார சவால்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

மத்திய கிழக்கு போர் சூழலால் உலக சந்தையில் எரிபொருள் விலை மற்றும் மின்சாரக் கட்டணங்கள் அதிகரித்த போதிலும், அதனை அரசாங்கம் வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எரிபொருள் நிவாரணங்களை வழங்குவதற்காக ஒட்டுமொத்தமாக 10,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதத்தில் 2,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட நிலையில், எதிர்வரும் 2 மாதங்களுக்கும் மேலும் 2,000 கோடி ரூபாய் ஒதுக்கப்படவுள்ளது.

இதன் மூலம், பொதுமக்கள் பயன்படுத்தும் ஒவ்வொரு லீற்றர் டீசலுக்கும் அரசாங்கம் 100 ரூபாய் நிவாரணம் வழங்குகிறது. எரிபொருள் விலை உயர்வால் மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்க நேரிட்டாலும், 95 சதவீதமான சாதாரண மின் நுகர்வோர்கள் இதனால் பாதிக்கப்படவில்லை.

அவர்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்கியுள்ளதுடன், இந்த நிவாரணங்கள் செப்டெம்பர் மாதம் வரை நீடிக்கப்படும். எஞ்சிய 5 சதவீதமான உயர் நுகர்வோருக்கே கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டிற்குச் சிறந்த அரச சேவை தேவைப்படுவதை உணர்ந்து, அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பானது 3 கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதன் அடுத்த கட்டமாக, வரும் ஜனவரி மாதத்தில் புதிய சம்பள உயர்வு நடைமுறைக்கு வரும் என அவர் உறுதியளித்தார். (அ)

## மட்டக்களப்பு நூலகத்தின்...

உத்தியோகபூர்வ இணையத்தளமும் ஜனாதிபதியினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்தப் புதிய நூலகக் கட்டடத்தில், சிறுவர்களுக்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்காகத் தனியானதொரு பிரிவு நிறுவப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

நாட்டில் வாசிப்பு கலாசாரம் குறைந்து வரும் இவ்வேளையில், தமிழ் மக்கள் இன்னமும் வாசிப்பதில் காட்டி வரும் ஆர்வம் பாராட்டத்தக்கது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, நூலகம் ஒன்றைத் திறப்பது என்பது சிறைச்சாலையின் தேவையை இல்லாமல் செய்வதாகும் என்றும், இந்த பொது நூலகத்தின் புதிய கட்டிடத்தைத் திறப்பதன் மூலம் தமிழ் மக்களின் புத்தக வாசிப்பு கலாசாரத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு ஊக்கமளிப்பதாக அமையும் என்றும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பொது நூலகத்தின் புதிய கட்டடத்தை பார்வையிட்ட ஜனாதிபதி, மாநகர சபை ஊழியர்களுடன் சுமூகமான கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். இதன்போது மட்டக்களப்பு மாநகர சபையின் நகரபிதா கே. சிவம் பாக்கியநாதன், ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னம் ஒன்றையும் வழங்கினார்.

இந்நிகழ்வைக் குறிக்கும் வகையில் ஜனாதிபதியினால் நூலக வளாகத்தில் மரக்கன்று ஒன்றும் நடப்பட்டது.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி, கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர ஆகியோருடன், கந்தசாமி பிரபு, ஜி. சிறீநேசன், எஸ். இராசமாணிக்கம், எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் உள்ளிட்ட ஆளுங்கட்சி,

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

## மட்டு.சிறையில்...

பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் சந்தித்துள்ளனர்.

இந்த விடயத்தை பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோர், மட்டக்களப்பு சிறைச்சாலைக்குச் சென்று பிள்ளையானை சந்தித்துள்ளனர்.

இந்த நிலையில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு வாரத்திற்குள், பிள்ளையானுக்கு பிணை பெற்றுக் கொடுக்கப்படும் என அவர்கள் கூறியிருந்ததாகவும் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிள்ளையானின் முன்னாள் பிரத்தியேக செயலாளர் ஆசாத் மௌலானாவிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில், பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்துக்கு இந்த விடயங்களை தெளிவுபடுத்தியுள்ளார்.

தற்போது பிரான்ஸில் வசித்துவரும், ஆசாத் மௌலானாவிடம், பிரான்ஸ் தூதரகத்தில் வைத்து, குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகளால் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பால்மா விலை...

அமைவாக, 450 கிராம் இறக்குமதி செய்யப்படும் பால் மா பைக்கற் ஒன்றின் விலை 50 ரூபாவினாலும், 1 கிலோ கிராம் பால் மா பைக்கெற் ஒன்றின் விலை 125 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பால் மா இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## பால் தேநீரும்...

அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், டொலர் வீத உயர்வு மற்றும் இந்தியாவின் ஏற்றுமதித் தடை காரணமாக வரும் நாள்களில் மேலும் பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

சந்தை நிலவரங்கள் மற்றும் நாணய மாற்று வீதங்களைக் கருத்திற்கொண்டு, இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலைகளை அதிகரிக்க பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. (அ)

## தேர்தல் ஆணைக்குழு...

தங்களது ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்குமாக அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் இந்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் கூடியிருந்தது.

இதேவேளை, அண்மையில் சட்டமா அதிபர் திணைக்களமும் இந்த விசேட குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தது.

அதன்போது, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் உள்ள சட்ட ரீதியான தடைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அக்குழுவினால் அறிவுறுத்தப்பட்டது. (அ)

## மீண்ம் அராஜக...

செயற்பாடுகளில் ஈடுபடவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இந்திக்க அநுருத்த தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தை மையமாகக் கொண்டு சில உள்நாட்டு நிறுவனங்கள் தங்களின் சொந்த நிகழ்ச்சி நிரல்களை அமுல்படுத்தி வருவதாக சுட்டிக்காட்டிய அவர், இதன் காரணமாகவே வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கை இழக்கப்பட்டு, கொழும்பு பங்குச்சந்தையில் இருந்த வெளிநாட்டு நிறுவனங்கள் தமது முதலீடுகளை வாபஸ் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அண்மையில் வாகனங்களுக்கான கூடுதல் வரி விதிப்பு வர்த்தமானி வெளியாவதற்கு முன்னர், ஆயிரக்கணக்கான வாகனங்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி நாட்டுக்கு உண்மையை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் காலத்தில், பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் 360 ரூபாவாக இருந்த டொலரின் பெறுமதி 290 ரூபாவாகக் குறைக்கப்பட்டதுடன், மக்களுக்கு நிவாரணங்களும் வழங்கப்பட்டன.

ஆனால், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் டொலரின் மதிப்பு மீண்டும் 340 ரூபாவாக உயர்ந்துள்ளதுடன், அவசியமற்ற பொருட்கள் எவ்வித கட்டுப்பாடும் இன்றி இறக்குமதி செய்யப்படுவதாக அவர் சாடினார்.

உள்நாட்டில் உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், இன்று ஒரு ஊசியைக் கூட தயாரிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதுடன், உப்பு மற்றும் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களையும் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்கிறது. அரசாங்கத்தின் 160 உறுப்பினர்களுக்கும் (ஜனாதிபதி உட்பட) நாட்டை வழிநடத்த எவ்வித ஆளுமையும் இல்லை என்பது இதன் மூலம் தெளிவாகிறது என அவர் தெரிவித்தார். (அ)

## ஓகஸ்ட் வரை...

செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, அமெரிக்காவிலிருந்து 90,000 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் தாங்கிய கப்பல் ஒன்று இம்மாதம் 28 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளது.

அத்துடன், மற்றொரு மசகு எண்ணெய் கப்பல் இம் மாதம் 31 ஆம் திகதி நாட்டை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், தற்போது நாட்டில் எரிபொருள் நுகர்வு குறைந்துள்ளது-என்றார். (அ)

## இலங்கையில் எபோலா...

தொற்றுகளும், 65 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன.

எனினும், நிலைமை உலக சுகாதார அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளதால், பிற நாடுகளுக்குப் பரவும் வாய்ப்பு குறைவு என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆபிரிக்க நாடுகளிலிருந்து வருகை தருவோர், உடல்நலக்குறைவு ஏற்பட்டால் உடனடியாக அருகிலுள்ள அரச மருத்துவமனையையோ அல்லது தகுதியுள்ள மருத்துவரையோ அணுகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நோய் பரவலைத் தடுக்க விமான நிலையங்களில் பரிசோதனைகளை பலப்படுத்துமாறு சுகாதார அதிகாரிகளை அவர் வலியுறுத்தியுள்ளார்.

சரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் இலங்கையில் இந்த பாதிப்பைத் தவிர்க்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# சாமர சம்பத் எம்.பியை பாராளுமன்றின் வளாகத்திலிருந்து வெளியேற்ற உத்தரவு!

## சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன விடுத்தார்

கொழும்பு, மே. 21

சபை நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து இடையூறு ஏற்படுத்தியதாக் கூறி எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவை சபையிலிருந்து வெளியேறுமாறு நேற்று சபாநாயகர் உத்தரவிட்டார்.

பாராளுமன்ற அமர்விலேயே சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வின்போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க, தன்னுடைய வழக்கு விசாரணை ஒன்றின் நீதிமன்ற தீர்ப்பு குறித்து கருத்து தெரிவித்தார்.

எனினும், நீதிமன்ற தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தமுடியாது என சபாநாயகர் தொடர்ந்தும் எச்சரித்தார்.

இதனையடுத்து சபை முதல்வர் பிமல் ரத்நாயக்கவும் நீதிமன்ற தீர்ப்பு குறித்து வழக்கின் சந்தேக நபரான ஒருவர் கருத்து தெரிவிப்பது தவறானது என்று கூறினார்.

ஆனால், இதனை பொருட்படுத்தாத பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தொடர்ந்து சபையில் கூச்சலிட்டதைத் தொடர்ந்து அவரை சபையில் இருந்து வெளியேற்றுமாறு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன உத்தரவிட்டார். (அ)



# போர்வீரர் நினைவுத்தூபி சம்பவம் சட்ட நடவடிக்கைக்கு விமல் தயார்!

கொழும்பு, மே. 21

தேசிய போர் வீரர் நினைவுத்தூபி அருகே இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் எந்தவொரு சட்ட நடவடிக்கையையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போர் வீரர்களுக்கு மலர் அஞ்சலி செலுத்த மேற்கொண்ட முயற்சி தொடர்பில் வழக்கு தொடரப்படுமா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

"போர் வீரர்களை நினைவு கூருவதற்கும், அவர்களுக்கு மரியாதை செலுத்துவதற்கும் இடையூறு விளைவிக்கப்பட்டால், அது குறித்து வழக்குத் தொடரப்பட்டால் அதனை எதிர்கொள்ள நாங்கள் ஒருபோதும் தயங்கமாட்டோம்" என்று குறிப்பிட்டார். (அ)

# சிறுவர் புற்றுநோய் சிகிச்சையின் வெற்றியானது உயிர் பிழைப்பதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது!

## ஜெனிவாவில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



ஜெனிவா, மே. 21

சிறுவர் புற்றுநோய் சிகிச்சையின் உண்மையான வெற்றி என்பது உயிர் பிழைப்பதில் மட்டுமல்ல, அவர்கள் ஆரோக்கியமாகவும் கௌரவமாகவும் வாழ்வதை உறுதி செய்வதிலேயே உள்ளது என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வலியுறுத்தியுள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்ற 79ஆவது உலக சுகாதார சபையின் சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலக சுகாதார நிறுவனத்தின் உலகளாவிய முன்னெடுப்பின் கீழ், 2030ஆம் ஆண்டுக்குள் சிறுவர் புற்றுநோய் பிழைப்பு விகிதத்தை குறைந்தது 60 சதவீதமாக உயர்த்த உலகளாவிய தலைவர்கள் உறுதியளித்துள்ளனர்.

புற்றுநோயிலிருந்து உயிர் பிழைத்த சிறுவர்கள் எதிர்கொள்ளும் உடல், மன மற்றும் சமூக ரீதியான நீண்டகால சவால்களை நிவர்த்தி செய்வது அவசியம்.

இலங்கையின் இலவச பொது சுகாதார முறைமை ஊடாக புற்றுநோய்க்கான நோய் கண்டறிதல், சிகிச்சை மற்றும் மனோசமூக ஆதரவை உறுதி செய்ய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது.

மருத்துவமனைகளைத் தாண்டி, பாடசாலைகள், குடும்பங்கள் மற்றும் சமூக மட்டத்திலான ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் தொடர்ந்து கண்காணிப்பு சேவைகளை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இலங்கை, சிறுவர் புற்றுநோய் சிகிச்சை மையங்கள் ஊடாக குழந்தைப் பருவத்திலிருந்து முதிர்வயது வரை தொடர்ச்சியான கவனிப்பை உறுதி செய்ய முன்னுரிமை அளித்து வருகிறது-என்றார். (அ)

# இலங்கையில் ரயில் சேவையை மேம்படுத்த ரஷ்யாவின் உதவி!

கொழும்பு, மே. 21

இலங்கையின் ரயில் சேவையை மேம்படுத்துவதற்காக ரஷ்யாவின் தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கையெழுத்திடப்பட்டுள்ளது.

ரஷ்ய போக்குவரத்து அமைச்சின் இராஜங்க செயலாளரும் பிரதி அமைச்சருமான திமித்ரி எஸ். ஸ்வெரெவ் மற்றும் இலங்கையின் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோருக்கு இடையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளது.

ரஷ்யாவின் கசான் நகரில் நடைபெற்ற 17 ஆவது சர்வதேச பொருளாதார மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க கலந்துகொண்ட போதே இந்த உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது. (அ)

# சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கைக்கு 700 மில்லியன் டொலர் நிதி

கொழும்பு, மே. 21

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் திட்டத்தின் கீழ், இலங்கைக்கு இம்மாதம் 700 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி கிடைக்கப் பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி, இரண்டு தவணைக் கொடுப்பனவுகளின் மூலம் வழங்கப்படவுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார மீட்பு நடவடிக்கைகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறைகளுக்கு ஆதரவாக இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் பொருளாதார சீர்திருத்தத் திட்டங்கள் நாட்டின் நிதி நிலைத்தன்மையை வலுப்படுத்த உதவும் என அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# இலங்கை ரூபாயின் மீது தொடர்ச்சியாக அழுத்தம்!

கொழும்பு, மே. 21

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 330 ரூபாயைக் கடந்துள்ளமை, இலங்கை ரூபாயின் மீது தொடர்ச்சியாக நிலவும் அழுத்தத்தை வெளிப்படுத்துவதாக இலங்கை ஆடை உற்பத்தியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் யோஹான் லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைவது எரிபொருள் மற்றும் வலுசக்தி போன்ற செலவுகளை அதிகரிப்பதோடு, இது உள்நாட்டுப் பணவீக்கத்துக்கும் வழிவகுக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இலங்கை நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் செல்வதுரை துமிலன் இது குறித்து கருத்து தெரிவிக்கையில், எரிபொருள் இறக்குமதியைக் கட்டுப்படுத்துதல், எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துதல், அந்நிய செலாவணி கையிருப்பு மீதான அழுத்தத்தைக் குறைத்தல் மற்றும் நீண்டகால பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நிலைபேற்றுத்தன்மைக்கு ஆதரவளிப்பதற்காக, இலங்கை மாற்று வலுசக்தி மற்றும் மின்சார வாகனங்களை நோக்கிய மாற்றத்தை விரைவுபடுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்.

பிராந்தியத்திலேயே அதிக உற்பத்திச் செலவு கொண்ட நாடுகளில் ஒன்றாக இருக்கும் நிலையில், இலங்கையால் நிலையான கைத்தொழில்மயமாக்கலை அடைய முடியாது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# நிலக்கரி விநியோக நிறுவனங்களிடமிருந்து 27 மில்லியன் டொலர்கள் அபராதம் வசூலிப்பு

கொழும்பு, மே. 21

தேவையான மின் உற்பத்தியை வழங்கத் தவறிய நிலக்கரி விநியோகம் தொடர்பாக, சுமார் 27 மில்லியன் அமெரிக்க டொலர் அபராதத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், மேலும் 15 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பிணைப்பத்திரத் தொகையும் அரசாங்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த வலுசக்தி பிரதி அமைச்சர் அர்க்காம் இலியாஸ்-

"சர்ச்சைக்குரிய இந்த நிலக்கரித் தொகுதி நாம் எதிர்பார்க்கும் அளவிலான மின் உற்பத்தியை வழங்குவதில்லை. இருப்பினும், நாம் அந்த நிலக்கரி இருப்புகளைத் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றோமே தவிர, அவற்றை அகற்றவில்லை.

இந்த விவகாரம் தொடர்பில் அபராதத் தொகைகள் ஏற்கனவே வசூலிக்கப்பட்டுவிட்டன. இது வரை சுமார் 27 மில்லியன் அமெரிக்க டொலர் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 15 மில்லியன் அமெரிக்க டொலர் பிணைப்பத்திரமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

தரம் குறைந்த இந்த நிலக்கரியைப் பயன்படுத்துவதால் மின் உற்பத்தி நிலையத்தின் இயந்திரங்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த பிரதி அமைச்சர்,

"இங்குள்ள ஒரே பிரச்னை, இந்த நிலக்கரியிலிருந்து எதிர்பார்க்கப்படும் மின் உற்பத்தி கிடைக்காமல் போவதே ஆகும். இது குறித்து நாம் நிபுணர்களுடன் கலந்தாலோசித்தோம். இதனால் இயந்திரங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்று அவர்கள் எங்களுக்கு உறுதியளித்துள்ளனர்."-என்றார். (அ)

# 15,000 மெற்றிக் தொன் யூரியாவை கொள்வனவு செய்வதற்கு அனுமதி!

கொழும்பு, மே. 21

நாட்டின் சிறுபோக பயிர்ச்செய்கைக்குத் தேவையான 15,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தை விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் விவசாய சேவை குழுக்கள் மூலம் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2026 ஆம் ஆண்டின் சிறுபோகத்துக்கு 550,000 ஹெக்ரேயர் நெல் நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் என ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்டிருந்தபோதிலும், தற்போதைய சூழ்நிலைகளின்படி அது 450,000 முதல் 500,000 ஹெக்ரேயர் வரையான பரப்பளவாகக் குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அளவிலான நிலப்பரப்பில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு சுமார் 75,000 மெற்றிக் தொன் யூரியா உரம் தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தினரால் 21.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.